
# கமநலம்



கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பிரசுரம்

பங்குனி 1976

-/50 சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 980

# கமநலம்

கமக்காரர்களின் மத்தியில் தன்னம்பிக்கையையும், மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து, அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுபடுத்தி நிரந்தரமானதொன்றுக்கிக்கொள்ள இச் சஞ்சிகை உதவும்.

மலர் 3

இதழ் 1

பங்குனி 1976

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு

## பொருளடக்கம்

பக்கம்

1. மட்டக்களப்பில் நடந்த கமக்காரர் கருத்தரங்கு ... ... ... ... 1
2. குழுமுறையில் கமஞ்செய்து கண்ட வெற்றி 3
3. செரபிஸ் கூட்டுறவுப் பண்ணை ... ... 6
4. வெற்றிவழி செல்லும் விளைவுப் பெருக்கக் குழு — பொத்துஹேர ... 9
5. பெமினிவத்தை களஆய்கூடம் பற்றிய சமூக— பொருளாதார ஆய்வு ... 14
6. பிரதேச அபிவிருத்திச் சபைகள் ... ... 17
7. பால் உற்பத்தியை பெருக்கவுள்ள வழிகள் 18
8, மனிதனுக்கு உதவும் பூச்சிகள் ... ... 20
9. சிறுவருக்கு விளையாட்டு—விநோதம் 22
11. சிறுவருக்கு விளையாட்டும் விநோதமும்— விடை ... ... ... ... ... 23

அட்டைப் படம்:

செரபிஸ் கூட்டுறவுப் பண்ணையின் கோழிப் பண்ணையைப் படம் சித்தரிக்கிறது.

அட்டைப் படம்: சாந்த வீரசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் நடந்த கமக்காரர் கருத்தரங்கு

# கம உற்பத்திப் பெருக்கத்துக்குள்ள இடைஞ்சல்கள்

**மட்டக்களப்பில் கடந்த சனவரி மாதப் பிற்பகுதியில் ஒரு முக்கிய நிகழ்ச்சி இடம்பெற்றது. இரண்டு நாட்களாக நடைபெற்ற கமக்காரப்பெருமக்களின் கருத்தரங்கு ஒன்றைத் தான் குறிப்பிடுகிறோம். திரிகோணமலே, அம்பாறை, மொனருகலே, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் ஐந்திலிருந்து தேர்ந்த சில கமக்காரர்கள் பேராளர்களாக வந்து இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.**

பேராளர்களாக வந்திருந்த கமக்காரர்களுள் கமச்செய்கையில் அறிவும் அனுபவமும் வாய்ந்த பழுத்த பெரியவர்களும், கம விளைவுப்பெருக்கக் குழுத் தலைவர்களும், அத்தகைய குழுக்களின் செயலாளர் சிலரும், துடிப்பும் உற்சாகமும் வாய்ந்த இளம் கமக்காரர்களும், மக்களினல் சாதாரணமாகத் தங்களுக்கு வழிகாட்டும் தலைவர்கள் என ஏற்றுக்கொள்ளப்படுபவர் சிலரும் அடங்கியிருந்தனர்.

கம உற்பத்திப் பெருக்கத்துக்குள்ள இடைஞ்சல்கள் எவை, அவற்றுக்கான தீர்வுகள் என்ன என்பதை ஆராய்வதற்காகவே இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. உயர்மட்டத்தில் அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள், மேலதிகாரிகள் இத்தகைய பிரச்சனைகளை ஆராயலாம், தீர்வுகளைப் பற்றிச் சிந்திக்கலாம். ஆனல் அடித்தளத்தில் இன்று கமச்செய்கையில் நேரடியாக ஈடுபட்டுப் பாடுபடும் மக்கள் கம உற்பத்திப் பெருக்கத்தில் காணும் இடைஞ்சல்கள்தான் என்ன, அவற்றுக்கு அவர்கள் சொல்லும் தீர்வுகள் தான் என்ன என்பதைக் கண்டறிய கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் அக்கறை காட்டிவருகிறது. இக்காரணத்தினலேயே இக்கருத்தரங்கை இந்நிறுவகம் ஏற்பாடு செய்திருந்தது.

அரச கொள்கை நிறைவேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கும் அரசியல் அதிகாரி, கமத்தொழில் காணி அமைச்சின் செயலாளர், கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பணிப்பாளர், பங்குபற்றிய மாவட்டங்களில் பொறுப்பு வகிக்கும் அரசாங்க அதிபர்கள், நீர்ப்பாசன வேலைகள், நெற்கொள்வனவு, கூட்டுறவு அலுவல்கள் போம நிறுவனப் பணிகள் போன்றவற்றுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் பலரும் இக்கருத்தரங்குக்கு வந்து பல முக்கிய கருத்துக்களைத் தெரிவித்தனர்.

கருத்தரங்கிற்குப் பேராளர்களாக வந்திருந்த கமக்காரப் பெருமக்கள் தங்களுக்குள்ள பிரச்சினைகள் பலவற்றைப்பற்றி மனம் விட்டு, ஒளிவுமறைவின்றிப் பேசுனர்கள். “உங்களுக்குள்ள இடைஞ்சல்களை எடுத்துச் சொன்னல் மாத்திரம் போதாது. அப்படிப்பட்ட இடைஞ்சல்களுக்கு ஏற்ற தீர்வுகள் என்னவாக இருந்தால் நல்லது என நீங்கள் நினைப்பவற்றையும் சொல்லுங்கள். அதுவே முக்கியம்” எனக் குறிப்பிட்டார் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பணிப்பாளர் திரு. நாராயணசாமி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமஉற்பத்தியைப் பெருக்குவதில் இடைஞ்சல்கள் பல இருப்பதை மறுக்க முடியாதெனவும், இவற்றைக் களைவதற்குச் சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்ட கமத்தொழில் காணி அமைச்சின் செயலாளர் திரு. மகிந்த சில்வா நாடு அதன் வரலாற்றிலேயே முன்னொரு போதும் கண்டிராத மாற்றங்கள் பல கமத்துறையில் ஏற்பட்டுவருவதை மனதிற் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

கமக்காரப் பேராளர்கள் பல்தரப்பட்ட விடயங்களை எடுத்துப் பேசினார்கள். தட்டுப்பாடுகள், மோசடிகள், ஊழல்கள் போன்ற இடைஞ்சல்களைப் பற்றியும், வெள்ளப்பெருக்கு, தண்ணீர்த்தட்டுப்பாடு, பலகட்டப்பயிர்ச் செய்கை, கட்டாக்காலி மாடுகளின் தொல்லை, மேய்ச்சல் தரை போதாமை, கமக்கடன் போன்றவைபற்றியும் குறிப்பிட்டார்கள்.

மட்டக்களப்பில் நடைபெற்ற கமக்காரர் கருத்தரங்கு யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் முன்னர் நடைபெற்ற கமக்காரர் கருத்தரங்குகளிலிருந்து ஒரு விதத்தில் வேறுபட்டிருந்தது. அதாவது, கமக்காரப் பெருமக்கள், பல விடயங்களுக்கும் பொறுப்பு வகிக்கும் அரச உத்தியோகத்தர் முன்னிலையிலேயே தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். அதனால் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் சில விடயங்களைத் தெளிவுபடுத்தவோ, விளங்கப்படுத்தவோ முடிந்தது. இவ்வகையில் இது ஒரு நல்ல பரீட்சார்த்தமாகவே அமைந்தது.

கமக்காரப் பேராளர்கள் தெரிவித்த முக்கிய கருத்துக்கள் சில வருமாறு:

- மட்டக்களப்பு, திரிகோணமலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தூர்ந்துபோன குளங்கள் பல உள்ளன. இவற்றைத் திருத்தினால் பல ஏக்கர் நிலத்தில் புதிதாக நெல் விளைவிக்கலாம்.

- பயிர்ச் செய்கைக் குழுக்களை குளங்கள், வாய்க்கால்கள் போன்றவற்றுக்குப் பொறுப்பாக இருக்கச் செய்யலாம்.

- சிவில் எந்திரவியற் தாபனம் நிறைவேற்றிய திருத்தவேலைகள் பல இன்னும் செம்மையாகச் செய்யப்பட்டிருக்கலாம்.

- கல்லோயா நீர்த்தேக்கத்திலிருந்து பயிர்ச் செய்கைக்கும் வீட்டுப் பாவனைக்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. பயிர்ச் செய்கை நடக்காத போதும் வீட்டுப்பாவனைக்காகத் தண்ணீர் வழங்கவேண்டியிருப்பதால் கணிசமான அளவு நீர் வீணாகிறது. வீட்டுப் பாவனைக்குக் கிணறுகள் தோண்டுவதன் மூலம் பாசன நீர் வீணாவதைத் தவிர்க்கலாம்.

- அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கிரிந்தி ஓய வாய்க்கால் அமைப்பு வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

- கமக் கடன் தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

- உரம், இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்கும் கடனில் அரைவாசியையாவது உடன் கொடுத்தாலே, கமக்காரர்களுக்கும் இப் பொருட்கள் வேளைக்குக் கிடைக்கும்.

- ஒவ்வொரு கம விளைவுப்பெருக்கக் குழுப் பிரதேசத்துக்கும் இலங்கை வங்கிக்கிளை ஒன்று இருத்தல் வேண்டும்.

- கம அடையாள அட்டையின் பேரில் நெற்செய்கைக்கு மாத்திரமின்றி எந்தப் பயிர்ச் செய்கைக்கும் கடன் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

- டிறக்ரர் இயந்திரங்கள் கமவேலைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும்.

- கமக்காரர்களும் வயதான காலத்தில் ஏதாவதொரு வகையான ஓய்வூதியம் பெற வகை செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழு முறையில் கமஞ்செய்து கண்ட வெற்றி

நெடுங்காலமாக ஒருபோகத்தில் ஓர் ஏக்கரில் 18 அல்லது 20 புசல் விளைச்சலே கிடைத்தது. விளைச்சல் இப்படி ஏன் குறைவாகக் கிடைக்கவேண்டும்?

நெல் விளைவிப்பவர்கள் தங்கள் வசதிப்படி நேரம் கிடைப்பதைப் பொறுத்து பல்வேறு சந்தர்ப்பங்களில் வயலை உழுகிறார்கள்; ஊரிடுகிறார்கள்; நெல் பயிரிடுகிறார்கள். பக்கத்து வயலில் பயிரிடப்பட்ட நெல் 2-3 வாரப் பயிராகியிருக்கலாம். எனினும் அடுத்த வயற்காரருக்கு இன்னும் வயலை உழுவதற்கே நேரம் கிடையாது; பின் போட்டுக்கொண்டிருப்பார். கமக்காரர்கள் தங்கள் வசதிப்படி வெவ்வேறு நேரங்களில் பயிரிடும் வேலையை மேற்கொள்ளும்போது, களை ஒழிப்பு வேலையை அல்லது தண்ணீரை வயல்களுக்குக் கட்டும் வேலையைச் செம்மையாகச் செய்ய முடிவதில்லை. கையில் பணம் இல்லாத காரணத்தினால் சிலர் தங்கள் வயல்களுக்கு உரம் போடாதும் விட்டுவிடுகிறார்கள். கமஞ்செய்யும் அழகு இப்படி இருந்தால் விளைச்சல் குறைவாக இருப்பதற்குக் கேட்கவா வேண்டும்?

இப்படிப்பட்ட சீர் இல்லாத கமச்செய்கையைத் தவிர்க்க முடியாதா? வயல் நிலத்தில் வெயர்வை சிந்தி, வருந்தி உழைத்தும், கிடைக்கும் பலன் இப்படிக் குறைவாக இருந்தால், அவ்வாறு உழைப்பதில்தான் என்ன அர்த்தம்?

தொன்றுதொட்டு நெல் விளைவித்து வரும் எங்கள் நாட்டுக் கமக்காரர்கள் கமத்தொழிலைப்பற்றி நல்லாக அறியாததனாலா இத்தகைய பாதகமான பலன் ஏற்படுகிறது? கமக்காரர்கள் மேலும் மேலும் வறுமைப்படுவதிலிருந்து காப்பாற்ற முடியாதா?

இப்படிப்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வு காண **கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்** பரீட்சார்த்தமாக ஒரு முயற்சியை மேற்கொண்டது.


நிறுவகம் அதன் கள ஆய்கூடமாக கேகாலை மாவட்டத்திலுள்ள பெமினிவத்தை கம விளைவுப் பெருக்கக் குழுப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. இப்பிரதேசத்தினுள் கமத்தொழில், மிருக வளர்ப்பு ஆகியன தொடர்பாகப் பல்வேறு பரீட்சார்த்தங்களை நடத்தி அவற்றின்மூலம் மக்களின் சமூக - பொருளாதார நிலையை மேம்படுத்த இந்நிறுவகம் பாடுபடுகிறது.

பெமினிவத்தைப் பிரதேசத்தில் உள்ள **மொல்லிகொட** எனப்படும் வயற்புலம் கேகாலை மாவட்டத்துக்குள்ளேயே நல்ல விளைச்சலைத் தாவல்ல மண்வளம் வாய்க்கப்பெற்றது. அப்படியிருந்தும் அங்கு கமஞ்செய்வோருக்கு நெடுங்காலமாக ஒருபோகத்தில் 18 அல்லது 20 புசல் நெல்லுக்குமேல் கிடைத்ததில்லை. இங்கு விளைவைக் கூட்டுவதற்கான வழிதுறையைக் காண நிறுவகம் முனைந்தது.

கமத்தொழில் துறையில் அறிவும் அனுபவமும் பெற்ற ஒரு நிபுணர் இந்நிறுவகத்தில் சிலகாலம் பணிபுரிய **போலந்து** நாட்டிலிருந்து இங்கு வந்துள்ளார். அவரின் மேற்பார்வையின் கீழ் ஒரு பரீட்சார்த்த முயற்சியை மேற்கொள்வதற்காக மொல்லிகொட என்ற பகுதியில் சில வயல்களைத் தேர்ந்தெடுத்து அதில் கமக்காரர்கள் குழு முறையில் கமஞ்செய்தற்கு ஓர் ஏற்பாடு வகுக்கப்பட்டது. இவ்வயற்புலத்தில் பதினெட்டுக் கமக்காரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் வயல் நிலம் இருபது ஏக்கரிலும் உழுதல், நாற்று நடுதல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல், களை கொல்லி மருந்து அடித்தல் போன்ற அலுவல்களை குறித்த நாட்களுக்குள் எல்லோரும் ஒன்றாகவே செய்துமுடித்தற்கு வழிவகைகள் செய்துகொடுக்கப்பட்டன. வேளைக்கு விதை நெல், டிறக்ரர் சேவை, உரம், பூச்சிகொல்லி, களைகொல்லி மருந்துகள் ஆகியன கிடைக்கச் செய்து, கமவேலைகள் தடை, தாமதம் இல்லாது நடைபெற்றால் விளைச்சலைக் கூட்டமுடியுமா எனக்காண்பதே இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இம்முயற்சியில் டெமினிவத்தை கம விளைவுப் பெருக்கக்குழு மிக்க ஆர்வம் காட்டி பல உதவிகளைச் செய்ய முன் வந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட 18 கமக்காரர் களுக்கும் உரம், பூச்சி, களைகொல்லி மருந்து போன்றவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு கமவிளைவுப் பெருக்கக் குழு எழாயிரம் ரூபா வரையில் செலவிட்டது. இதைவிட, இப் பரீட்சார்த்த முயற்சியில் பங்குபற்றிய அத்தனை கமக்காரர்களுக்கும் நேர காலத் துக்குக்கடன் கிடைத்தது; ஒரே இன விதை நெல் கிடைத்தது; வேண்டிய வேளையில் உரம் கிடைத்தது; பயிரும் பாதிப்பில்லாது நன்றாக வளர்ந்தது. பலன் எப்படி இருந்தது, விளைச்சல் அதிகரித்தா, கமக் காரர்களுக்கு இந்த ஏற்பாடு பிடித்துக் கொண்டதா எனவும் அறிய ஆவற்படு வீர்கள்.


உண்மையில் குழுமுறையில் கமஞ்செய் யும் புதிய ஏற்பாடு நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிகரமாக இருந்தது. கடந்த பெப்ரவரி மாதம் 26 ஆந் திகதி மேலே குறிப்பிட்ட வயற்புலத்தில் அறுவடை நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது. அப்பகுதி மக்களும் இம்முறை விளைச்சல் எப்படி இருக்குமோ என ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். முன் ஒரு காலத்திலும் இல்லாதவாறு விளைச்சல் மூன்று மடங்காக, அதாவது ஏக்கருக்கு 60, 70 புசல் கிடைத்ததைக் கண்டு கமக் காரர் உள்ளம் பூரித்துப்போய்விட்டது. அப் பகுதிக் கமக்காரர்கள் எல்லோரும் இப் புதிய முறையை ஒருமனதாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

குழுமுறையில் பயிர் செய்வதன் மூலம் விளைச்சலை மும்மடங்காக அதிகரிக்க முடிகிற தென்றால், இதனை விரும்பாதவர்கள் எவ ரும் இருக்கமாட்டார்கள். டெமினிவத்தைப் பிரதேசத்தில் 16 பயிர்ச் செய்கைக் குழுக்கள் உள்ளன. இவற்றில் இது வரையில் 14 பயிர்ச் செய்கைக் குழுக்கள் தங்கள் பிரதேசங்களுக்கும் குழு முறையில் பயிர் செய்யும் முறையை அறி முகப்படுத்துமாறு கேட்டுள்ளார்கள்.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் நெற் செய்கையில் மாத்திரம் குழுமுறையைக் கையாளவில்லை. காணியற்ற இருபத்தொரு பேரைத் தேர்ந்து, 'திதுல' என்ற தோட்டத் தில் ஆளுக்கு ஓர் ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுத்து, அங்கே குழு முறையில் வாழை பயிரிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இவர் களுக்குச் சில அடிப்படை வசதிகளையும் வாழைக்கன்றுகளையும் இலங்கையின் சந் தைப்படுத்தற் சமாஜம் கொடுத்து உதவி யது. வாழைச்செய்கையால் வருமானம் கிடைக்கும்போது கமக்காரர்கள் கடன்களைக் கொடுத்துத் தீர்ப்பர். வாழைக்குலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விற்கும் பொறுப்பையும் இச் சமாஜம் ஏற்றுக்கொள்ளும்.

குழுமுறைக் கமச்செய்கைக்கு கமநல ஆராய்ச்சி பயிற்சி நிருவகம் ஏற்பாடு செய்து, மேற்பார்வையிட்டு ஆலோசனைகள் கூறி உதவியபோதிலும், டெயினிவத்தை விளைவுப்பெருக்கக் குழுவும், மாவனல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் பலவழிகளிலும் உதவி வழங்கின. கமத்தொழில் திணைக்களத்தின் விரிவாக்க உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் எப்போதும் கிடைத்தது.

"குழுமுறையில் கமஞ்செய்தல் மிக நல்லது. இப்படியான ஒருமுறை எங்கள் நாட்டிலே முன்னொரு காலத்தில் நடைமுறையில் இருந்திருக்க வேண்டும். பிறகு அந்த முறை எப்படியோ அழிந்தொழிந்து போயிருக்கும். இப்போது அதன் நன்மையைக் கண்ணாரக் காணும்போது அதன் சிறப்பை உணராது இருக்கமுடியுமா?" குழுமுறைக் கமச்செய்கையில் ஈடுபட்ட ஒரு கமக்காரர் சொன்ன வார்த்தைகளே இவை.

டெயினிவத்தை கமவிளைவுப்பெருக்கக்குழுத் தலைவரின் கருத்துத்தான் என்ன என்று பார்ப்போம்.

"இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் கமவிளைவுப் பெருக்கக் குழுவுக்கும் நன்மை உண்டு. கமக்காரர்களுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்போது அவர்களும் தயக்கமோ தாமதமோ இல்லாது பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்திவிடுகிறார்கள். அத்துடன் இத்தகைய முறையினால் ஒரு பிரதேசத்தில் வாழும் மக்களிடையே ஒற்றுமையையும் நிலைநாட்ட முடிகிறது. குழுமுறைப்பயிர்ச் செய்கை ஏற்பாட்டை நாடு முழுவதிலும் கையாண்டால், அரிசியிலாவது நாடு துரிதமாகத் தன்னிறைவு காணும்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செரபிஸ் கூட்டுறவுப் பண்ணை

**இது இளைஞர் கூட்டுறவுப்பண்ணை ஒன்றின் பெயர். இப்பெயரின் உச்சரிப்பைப் பார்த்துவிட்டு இது எங்கோ கிரேக்க நாட்டுப் பண்ணையோ என நினைத்துவிடாதீர்கள். எங்கள் நாட்டில், அதுவும், பொல்காவெலை நகரை அடுத்தே இக்கூட்டுறவுப் பண்ணை அமைந்துள்ளது.**

'செரபிஸ்' என்ற இத் தென்னந்தோட்டம் முன்னர் தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது. காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் பின்னர் இத்தோட்ட உடைமை அரசின் கைக்கு மாறியது. இதனையே இப்போது அரசு, இளைஞர்கள் சிலரிடம் ஒப்படைத்து, கூட்டுறவுப் பண்ணையைத்தோற்றுவித்துள்ளது.

விளைந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இவ்வயல்களுக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்தற்காகவும், நன்னீரில் மீன் வளர்ப்பை மேற்கொள்வதற்காகவும், ஒரு சிறிய குளத்தை அமைத்துள்ளார்கள். இக் குளத்தை அமைத்த முறையே கூட்டுறவு



இக்கூட்டுறவுப் பண்ணைக்குரிய நிலத்தின் மொத்தப் பரப்பளவு இருநூறு ஏக்கர். இதன் பெரும்பாகத்தில் செழித்து வளரும் தென்னை மரங்களும் இடையிடையே வாழை, அன்னாசி, மரவள்ளி, சேமங்கிழங்கு போன்றவையும் பயிரிடப்பட்டுள்ளன.


ஏறக்குறைய எட்டு ஏக்கர் நிலம் வயலாக உள்ளது. இதில் இளைஞர்கள் பாடுபட்டு உழைத்ததன் பயனாக நெல் செழித்து

முறையில் விரும்பத்தக்க நல்ல பல சாதனைகளை ஏற்படுத்தலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அரசுக்குச் சொந்தமான தோட்டங்கள், விளைவுப்பெருக்கக் குழுக்கள், பயிர்ச்செய்கைக் குழுக்கள், 'ஜனவசம' என்னும் மக்கள் குடியிருப்புக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களில் ஏறக்குறைய நானூறு பேர்களின் சிரமதானத்தினால் இக் குளம் உருவாகியதாம்.

பாற்பண்ணை ஒன்றும் இங்கு நடத்தப் படுகிறது. இப்போது 12 பாற்பசுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளாந்தம் ஏறக்குறைய 130 பைந்து பாலைத் தருகின்றன. இவற்றைவிட கன்றுகள், பசுக்களாக மேலும் 29 உருப்படிகள் நிற்கின்றன. மூன்று வருடங்களுக்கு முன் பதினேழாயிரம் ரூபாவுக்கு 30 மாடுகளை வாங்கியிருந்தனர். இவை நல்ல முறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. மாடு வளர்ப்பில் அனுபவம் பெற்ற இருவர் மாட்டுப் பட்டிக்குப் பொறுப்பாக இருக்கின்றனர். இப்பாற்பண்ணைக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. இவ்வருடத்தில் பசுக்கள், கன்றுகளின் எண்ணிக்கையை எழுபதாக அதிகரிப்பதற்கும் திட்டமிட்டுள்ளனர்.

இப்போது சிறிய அளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பன்றி வளர்ப்பு, முயல் வளர்ப்பு ஆகியன இவ் வருடத்தில் விருத்தி செய்யப்படவிருக்கின்றன. இவ்வாண்டு 150 பன்றிகளையும் 150 முயல்களையும், 20 ஆடுகளையும் வளர்ப்பதற்கு நினைத்திருக்கிறார்கள்.

கோழி வளர்ப்பும் இங்கு முறையாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்று வருதலைக் காணும்போது எவருக்கும் ஒருவித மன நிறைவு ஏற்படும். இப்போது முட்டைக்காக 750 கோழிகளையும் இறைச்சிக்காக 150 கோழிகளையும் வளர்த்து வருகிறார்களாம். இந்த ஆண்டில் முட்டைக் கோழிகளை 2000 ஆகவும் இறைச்சிக் கோழிகளை 1000 ஆகவும் அதிகரிக்கப்போகிறார்களாம்.

புல்வளர்ப்பு, கரும்புச் செய்கை ஆகியவற்றையும் இப்பண்ணை இளைஞர்கள் உற்சாகத்துடன் மேற்கொள்ள இருக்கிறார்கள். இப்போதே ஏறத்தாழ 60 ஏக்கரில் புல்லை ஊடுபயிராக வளர்த்துள்ளார்கள். இதைவிட, மேலும் பத்து ஏக்கரில் புல் நாட்டப்பட இருக்கிறது. ஐந்து ஏக்கரில் கரும்பும் பயிரிட உத்தேசிக்கிறார்கள்.


கமம் முயற்சிகளை விட, கைத்தொழில் முயற்சிகள் சிலவற்றையும் இப்பண்ணையில் பார்க்கக்கூடியதாக உள்ளது. ஆரம்பித்துள்ள கைத்தொழில்களை அபிவிருத்தி செய்துகொண்டு மேலும் சில கைத்தொழில்களை மேற்கொள்ள எண்ணியுள்ளார்கள்.

கூட்டுரம் தயாரித்தல், செங்கல் அரிதல், பண்ணைக்குத் தேவைப்படும் ஆயுதங்கள், சிறு கருவிகள், வாளிகள் போன்றவற்றைச் செய்தல், கொப்பறா உற்பத்திசெய்தல் ஆகிய தொழில்கள் இப்போது நடைபெறுகின்றன. இத் தொழில்கள் மேலும் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

இளைஞர்களிடம் இத்தோட்டம் 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபரில் ஒப்படைக்கப்பட்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்னை மரங்கள் மாத்திரமே நின்றன. இது வரையில் அறுபத்தைந்து இளைஞர்கள் இப்பண்ணையில் உறுப்பினர்களாகச் சேர்ந்து சளைக்காது உழைத்ததாலும், அபிவிருத்திக் கென மூன்று இலட்சம் ரூபா செலவிடப் பட்டதாலும் முன்னேற்றம் பல ஏற்பட்டுள்ளன. சென்ற வருடம் மே மாத இறுதி வரையில் ஏறக்குறைய எழுபதினாயிரம் ரூபா நிகர இலாபம் கிடைத்ததாகத் தெரிய வந்தது. இதில் ஒரு பாகம் உறுப்பினர் களுக்குப் பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இதைவிட, வங்கியிலும் தொண்ணூறாயிரம் ரூபாவரையில் போடப்பட்டுள்ளது.

உறுப்பினர்களில் முப்பது பேர் வரை யில் தங்கள் குடும்பத்துடன் தங்கியிருக்கிறார் கள். அவர்களுக்குச் சிறிய வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பண்ணையை நிருவகிப்பதற்கெனப் பல்வேறு குழுக்கள் உள்ளன. திட்டமிடற் குழு, நிதிக்குழு, ஒழுக்கநெறிக்குழு, நலன் புரிக்குழு, நிருவாகக் குழு எனப் பல இருக்கின்றன. எல்லா உறுப்பினர்களையும் கொண்ட பொதுச்சபை எடுக்கும் முடிவுகளை சம்பந்தப்பட்ட குழு ஒவ்வொன் றும் செயற்படுத்துகிறது. நிதி வழங்கும் திட் டம் மாத்திரம் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்கும்.

செம்மையாக நடக்கும் இளைஞர் கூட்டுற வுப் பண்ணைகளினால் நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்படும். உற்பத்தி பெருகும்; வேலை வாய்ப்பு அதிகரிக்கும். ஊதியம் பரவலாகப் பகிர்ந்து கிட்டும். இவற்றால் கூட்டுறவு முறை பலப்படும்.


## கதிரில் ஒரு மணி

உற்பத்தியாகும் உணவுப் பொருட்களை நாடுகளுக்கிடையிலும், உலக பிராந்தியங் களுக்கிடையிலும் சமமாகப் பிரித்து வழங்க முடிந்தால், போஷாக்கு இன்மையால் மக்க ளுக்கு ஏற்படும் துன்பங்களையே தடுத்துவிடலாம். உலக மட்டத்திலே உணவுத் தட்டுப்பாடு இல்லை; செல்வ நாடுகளில் வாழும் மக்களும் வறிய நாடுகளில் வாழும் செல்வந்தர்களும் அநேகமாகப் போஷாக்குத் தேவையிலும் பார்க்கக் கூடுதலாக உண்கிறார்கள்.

ஆர். பி. சிங்ஹா
'செரஸ்', உணவு விவசாய தாபன
வெளியீடு, ஒக்ரோபர் 74.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வெற்றிவழி செல்லும்**
**விளைவுப்பெருக்கக் குழு**

# பொத்துஹேர

**கிராமிய துறையில், மக்களுக்கு நன்மையான பலதரப்பட்ட அலுவல்களையும், பாரதூரமான மாற்றங்களையும் விளைவுப்பெருக்கக் குழு எனப்படும் நிறுவனம் ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. இப்படிப்பட்ட நிறுவனங்கள் நாடு முழுவதிலும் அமைக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். இவை நல்ல முறையில் இயங்கினல் மக்களுக்குப் பலவித நன்மைகள் கிடைக்கும் என்பதுடன், இதுவரை கமக்காரர்களுக்கு இருந்துவந்த பல அல்லல் தொல்லைகளும் கூட ஒழியும். ஆதலால், வெற்றிகரமாக இயங்கும் விளைவுப் பெருக்கக் குழுக்கள் எவை எனக் கண்டு, அவற்றை ஒவ்வொன்ருக உங்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும் என இச் சஞ்சிகை நினைக்கிறது.**

இவ்வரிசையில் முதலாவதாக **பொத்துஹேர** விளைவுப்பெருக்கக் குழுவை இங்கு அறிமுகப்படுத்துகிருேம்.

பொல்காவெலை என்ற இடத்தைப்பற்றி அநேகமாக எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். புகையிரதப் பாதையில் இது முக்கிய சந்தி என்பதை பள்ளிக்குச் செல்லும் சிறு பிள்ளைகூட அறியும். பொல்காவெலைக்கும் குருநாகலைக்கும் இடையில் இருக்கிறது, **பொத்துஹேர** என்ற ஊர்.


பொத்துஹேர பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதில் இங்குள்ள கம விளைவுப்பெருக்கக் குழு எப்படிச் செயற்படுகிறது, என்ன முறைகளைக் கையாளுகிறது, பயிர்ச் செய்கைக் குழுக்கள் அதனுடன் எப்படி ஒத்துழைக்கின்றன என்பன போன்ற பல விஷயங்களை இங்கு கவனிப்போம்.

கமக்காரர் மூவாயிரம் பேர்;
இருபோகத்திலும் பயிரிடப்படும் வயல் நிலம் மூவாயிரத்து இருநூறு ஏக்கர்;
மேட்டுநிலம் ஒன்பதாயிரம் ஏக்கர்;
கிராமசேவகர் பிரிவுகள் பதின்நான்கு;
பயிர்ச்செய்கைக் குழுக்கள் பதின்நான்கு.

பொத்துஹேர கம விளைவுப்பெருக்கக் குழுவின் செயற்பிரதேச விஸ்தீரணத்தையும், அது எத்தனை கமக்காரர்களின் நலத்தைக் கவனிக்க வேண்டியுள்ளது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யும் மேலே கண்டோம். இப்பிரதேசத்தில் கமத்தொழில் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை இங்குள்ள கம விளைவுப் பெருக்கக் குழு மேற்கொண்டுள்ளது என்பதை அறிய முனைந்தோம்.

- கமக்காரர்களுக்குத் தேவைப்படும் கடன்வசதிகள்;
- பூச்சிகொல்லி, களைகொல்லி மருந்துகள், உரம் போன்ற உள்ளீடுகள்;
- பயிர்ச்செய்கைக் குழுக்களுடன் ஒருங்கிணைந்து ஒத்துழைத்தல்;
- குழுவின் அலுவல்களுக்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்டுதல்;
- கமக்காரர்களது நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்துக்கும் பாத்திரமாதல்;

ஆகிய தொடர்பான விடயங்களில் பொத்துஹேர கம விளைவுப்பெருக்கக் குழு பல நடவடிக்கைகளை முன்வைத்துச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைக் குழுவின் நிருவாக உறுப்பினர்களிடமிருந்து அறிந்து கொள்ள முடிந்தது.

## கமக்காரருக்குத் தேவைப்படும் கடனைப்பெற வகைசெய்தல்

1974 ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட கம விளைவுப்பெருக்கக் குழு முதன்முதலாக மேற்கொண்ட முக்கிய பணி அதன் பிரதேசத்தில் வாழும் கமக்காரர்களில் ஏறக்குறைய ஆயிரம் பேருக்குக் கம அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமையாகும். இதன் நிமித்தம் சென்ற சிறுபோகத்தின் போது கடன் தேவைப்பட்ட கமக்காரர்களில் ஏறக்குறைய 125 பேருக்கு மொத்தம் எண்பத்தேழாயிரம் ரூபா வரையில் கடன் பெற்றுக்கொடுக்க முடிந்தது. கம விளைவுப் பெருக்கக் குழு, பயிர்ச் செய்கைக் குழுக்களின் ஊடாகக் கமக்காரர்களுடன் சுமுகமான உறவை நிலைநாட்டிக்கொண்டிருப்பதால், மேற்காட்டிய கடன் தொகையில் எண்ணாயிரம் ரூபா நீங்கலாக மற்றத் தொகை முழுவதும் திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டது. கடனைத் திருப்பிக் கட்டச் செய்வதில் பயிர்ச் செய்கைக்குழு உறுப்பினர்கள் அதிக அக்கறை காட்டியதுடன் கம விளைவுப்பெருக்கக் குழுவுக்கும் பலத்த பக்க துணையாக நின்றனர் எனத் தெரிய வந்தது. கமக்கடனைக் காலவேளை தவறாது கிடைக்கச் செய்து, கடன் பணம் கமச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கைக்குப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் சற்றுக் கவனித்துக்கொண்டால் அறுவடைக்காலத்தின்போது கமக்காரரிடமிருந்து கொடுத்த கடனைத் திருப்பிப் பெறுவது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமல்ல என்பது இவ்விளைவுப்பெருக்கக் குழுத் தலைவரின் கருத்தாகும்.

## பூச்சிகொல்லி, களைகொல்லி மருந்துகள், உரம் ஆகிய உள்ளீடுகளை வழங்குதல்

போன சிறுபோகம், பெரும்போகம் இரண்டின்போதும் பொத்தஹேர கம விளைவுப்பெருக்கக் குழு நாற்பத்து நாலாயிரம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளைக் கமக்காரர்களுக்கு வழங்கியுள்ளது. இவற்றின் விற்பனைக்குக் கிடைக்கும் 5 சதவீத கமிஷனை மாத்திரம் குழு ஆதாயமாக வைத்துக்கொண்டு, பயிர் மருந்து வகைகள், உரம் ஆகியவற்றை விநியோகிக்கிறது. போன வருடப் பெரும்போகத்தில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஏறக்குறைய 2,500 அந்தர் உரத்தை இக்குழு கமக்காரர்களுக்கு வழங்கியுள்ளது. சிறுபோகத்திலும் இதே அளவு பெறுமதியான உரம் குழுவினால் விநியோகிக்கப்பட்டுள்ளது. கமக்காரர்களுக்கு உரம் வழங்கும் சேவை தங்குதடையில்லாது திறம்பட நடைபெற வேண்டும் என்பதற்காக உரத்தைத் திரட்டி வைப்பதற்கென ஒரு பண்டசாலை இங்கு நிறுவப்படவிருக்கிறது. இக்கட்டிடத்துக்கான அத்திவாரம் அமைக்கப்பட்டிருப்பதாக குழுவின் தலைவர் குறிப்பிட்டார். மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதனாலேயே கம விளைவுப்பெருக்கக் குழுவையும் பலப்படுத்த முடியும். இதனாலேயே பொத்துஹேர கம விளைவுப்பெருக்கக் குழு கமக்காரர்களது வருவாயைப் பெருக்குவதில் முனைந்து நிற்கிறது.

## பயிர்ச் செய்கைக் குழுக்கள் அளிக்கும் ஒத்துழைப்பு

கம விளைவுப்பெருக்கக் குழு பயிர்ச் செய்கைக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பை நிலைநாட்டிவருகிறது. பயிர்ச் செய்கைக் குழுக்களும் பூரண ஒத்துழைப்பை விளைவுப் பெருக்கக் குழுவுக்கு அளித்து வருகின்றன. இதனைப் பற்றி விளைவுப்பெருக்கக் குழுவின் தலைவர் குறிப்பிடுகையில் சொன்னார்: "எங்கள் கம விளைவுப்பெருக்கக் குழுப் பிரதேசத்தில் 14 பயிர்ச் செய்கைக் குழுக்கள் இயங்கிவருகின்றன. ஒவ்வொரு பயிர்ச் செய்கைக் குழு உறுப்பினரும் கவனிப்பதற்கென வெவ்வேறு பகுதி ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளது. அவரவர் தங்களுக்குரிய பகுதியில் நடைபெறும் கமமுயற்சிகளை கமத் தொழில் விளைவுப்பெருக்கக் குழுவுடன் சேர்ந்து கவனிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விளைவுப்பெருக்கக் குழுவின் தலைவர் என்ற முறையில் நானும் ஏனைய உறுப்பினர்களும் பெரும்பாலும் பயிர்ச் செய்கைக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்கிறோம். பயிர்ச்செய்கைக் குழுத் தலைவர்கள் மாதம் ஒருமுறை விளைவுப்பெருக்கக் குழு அலு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலகத்தில் கூடி, தங்கள் பணிகளை ஆராய்கிறார்கள். இதனால் இருவித குழுக்களுக்கிடையே உறவு பலப்படுவதுடன், உறுப்பினர்களும் தங்கள் பொறுப்பில் ஒதுக்கப்பட்ட பகுதியை அபிவிருத்தி செய்வதிலும் அதிக அக்கறை காட்டமுடிகிறது."

## விளைவுப் பெருக்கக் குழுவுக்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்டுதல்

கமக்காரர்களுக்கு உரம், களைகொல்லி, பூச்சிகொல்லி மருந்துகள் போன்றவற்றை விநியோகித்ததன் மூலம் விளைவுப்பெருக்கக் குழுவுக்குப் பதினையாயிரம் ரூபா ஆதாயமாகக் கிடைத்தது. இவ்வாதாயத்தில் பெரும் பாகம் தனிப்பட்ட வியாபார தாபனங்களிடமிருந்து கிடைத்த கமிஷனேயாகும். இக்குழு அதன் பணத்தில் மருந்து தெளிக்கும் கருவிகள் 6 வாங்கியுள்ளது. அவற்றை வாடகைக்குக் கொடுத்து, ஏக்கர் ஒன்றுக்கு மருந்து தெளிக்க 8/- ரூபா வீதம் அறவிடுகிறது. 3 அங்குல தண்ணீர்ப் பம்பு ஒன்றும் குழுவிடம் உள்ளது. இதனையும் வாடகைக்குக் கொடுத்து ஆதாயம் திரட்ட முடிகிறது. இலங்கை வங்கியிடமிருந்து எண்பதினாயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்று நாலு சில்லு பெர்குசன் ட்றக்ரர் ஒன்றையும் வாங்கியுள்ளது. இதனைக்கொண்டும் கணிசமான ஆதாயம் திரட்டலாம். பொத்துஹேரப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குச் செலவிட இதுவரையில் ஏறக்குறைய முப்பதினாயிரம் ரூபாவரையில் கிடைத்துள்ளது.

## கமக்காரர்களின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்துக்கும பாத்திரமாக விளங்குதல்

கமக்காரர்களின் வருவாயைப் பெருக்கி அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்துதல் கம விளைவுப்பெருக்கக் குழுவுக்குள்ளதொரு பொறுப்பு. இப்பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்ற முனைவதனால் பொத்துஹேரவில் உள்ள விளைவுப்பெருக்கக் குழுவுக்கு மக்களின் ஆதரவு நிறைய உண்டு.

ஒவ்வொரு பயிர்ச் செய்கைக் குழுப் பிரதேசத்திலும் 25 ஏக்கர் புலம் ஒன்றை தேர்ந்தெடுத்து; அதில் கமக்காரர்களின் துணையுடன் விளைவுப்பெருக்கக் குழு முன்மாதிரியான முறையில் கமஞ்செய்யமுனைகிறது. முன்னர் ஏக்கரில் சாதாரணமாக 25 புசல் நெல்லேனும் கிடைக்காதிருந்த புலங்களில் முன்மாதிரியான செய்கை முறையைக் கடைப்பிடித்ததன் காரணமாக ஏக்கருக்கு 90 புசல் விளைச்சல் கூடக் கிடைத்துள்ளது. உபகரணம், பணம் ஆகிய வசதிகள் ஓரளவுக்கு இந்த விளைவுப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கக் குழுவிடம் இருப்பதனால், பொத்துஹேரப் பகுதி மக்களுக்குக் கமத்துறையில் நல்ல சேவை கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

பொத்துஹேர விளைவுப்பெருக்கக் குழு திறம்பட இயங்கிக் கொண்டிருக்கையில், அங்குள்ள கமத்தொழில் சேவை நிலையத்திலுள்ள இலங்கை வங்கியும் மக்களுக்கு நல்ல சேவை ஆற்றிவருவதாக அறிகிறோம்.

நெற்செய்கையைப் பற்றி மாத்திரமல்லாது, மேட்டுநிலப் பயிர்ச் செய்கை பற்றியும் விளைவுப்பெருக்கக் குழு கமக்காரர்களுக்குத் தக்க ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்துவருகிறது. இக்குழுவின் மேற்பார்வையின் கீழ் கமஞ்செய்தற்கு எங்காவது விசாலமான நிலம் பெற்றுத்தந்தால் அது பொத்துஹேரப் பகுதியின் முன்னேற்றத்துக்குச் செய்யும் பெரும் உதவியாக இருக்கும். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு கம விளைவுப் பெருக்கக் குழு அக்கறை காட்டினால் எத்தனையோ விதத்தில் பணிபுரியலாம் என்பதற்கு பொத்துஹேர கம விளைவுப்பெருக்கக் குழு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

## சோயா அவரைக்கு ஈடானவை

| | | |
|---|---|---|
| 5 அவுன்ஸ் சோயா அவரை | சமன் | 14 அவுன்ஸ் மீன் |
| | ,, | 12 அவுன்ஸ் இறைச்சி |
| | ,, | 10 அவுன்ஸ் பருப்பு |
| | ,, | 9 முட்டைகள் |

ஐந்து அவுன்ஸ் சோயா அவரை எவை எவைக்குச் சமனாக இருக்கிறது என்பதை பார்க்கிறீர்கள். விசித்திரம் என்னவென்றால் 5 அவுன்ஸ் சோயா அவரை குறிப்பிடப்பட்டுள்ள மற்றையவற்றிலும் பார்க்க விலையிலும் நிறையிலும் குறைவாக இருப்பதும், சத்தில் கூடுதலாக இருப்பதுமே ஆகும். ஆகவே குறைந்த செலவில் கூடுதலான போஷாக்குச் சத்தை மக்களுக்குத் தரவல்லது சோயா அவரை என்பதை எப்போதும் நாம் நினைவு வைத்துக் கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் பணிகள்

# பெமினிவத்தை களஆய்கூடம் பற்றிய
# சமூக - பொருளாதார ஆய்வு

பெமினிவத்தை கம விளைவுப்பெருக்கக் குழுப் பிரதேசம் கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் களஆய்கூடமாக அமைந்திருக்கிறதென முன்னைய **'கமநலம்'** இதழ்களில் வாசித்திருப்பீர்கள். இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேல் மட்டத்திலே வகுக்கப்பட்ட பல திட்டங்களுக்குத் தள மட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் பல துணையாக இருந்தன. ஈரவலயத்தின் சமூக - பொருளாதார துறையைப்பற்றி ஆழ்ந்த ஆய்வு எதுவும் இதுகாலவரை மேற்கொள்ளப்படவில்லை. பெமினிவத்தைப் பிரதேசம் இத்தகைய ஆய்வுக்குத் தெரிவு செய்யப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம். இப்பகுதியின் அபிவிருத்திக்கு அரச திணைக்களம் எதுவும் விசேட திட்டம் எதையும் இதுவரையில் ஆரம்பித்திருக்கவில்லை. கள ஆய்கூடத்தினுள் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் பல நிறைவேற்றுத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதே இந்நிறுவகத்தின் குறிக்கோளாகும். வீட்டுத் தோட்டம், மிருக வளர்ப்பு, குழுமுறை உற்பத்தி, தேர்ந்த மேட்டு நிலத்தின் அபிவிருத்தி ஆகியவை உட்பட பல பரந்த நிகழ்ச்சித் திட்டங்கள் இங்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதே வேளையில் பெமினிவத்தை விளைவுப்பெருக்கக் குழு பிரதேசத்தில் சமூக பொருளாதார நிலைபற்றிய முக்கிய தகவல்களைத் திரட்டும் நோக்குடன் நிறுவகம் சமூக - பொருளாதார ஆய்வு ஒன்றினை நடத்தியது. கமக்காரர்களுக்கு அன்றாடம் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிதலும் இந்த ஆய்வின் மற்றொரு நோக்கமாகும். அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தற்கு அவசியப்படும் பல அம்சங்களைச் சமூக-பொருளாதார ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. அவற்றில் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:—

- ஆய்வுக்குட்பட்ட பகுதியில் காணி இல்லாப் பிரச்சினை கமத்தொழில் விருத்திக்கு இடைஞ்சலாக உள்ளது. குறிப்பாக **தலாபிட்டிய, ஹரத்ஹலை, மாவான, கள்ளிப்போறுவ** ஆகிய இடங்களில் காணி இல்லாக் கஷ்டம் மிக மோசமாகவுள்ளது. ஜனப் பெருக்கம், நில அமைப்பின் நிமித்தம் கமத்தொழிலுக்கு ஏற்ற நிலம் குறைவாக இருத்தல், கமக்காரரிடையே காணி நியாயமாகப் பிரித்து விநியோகிக்கப்படாதிருத்தல் ஆகியன இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணங்களாக இருக்கின்றன.

- பல கிராமங்களிலும் குத்தகைக் கமச்செய்கை, பல பங்குக்காணிச் செய்கை, மிகச் சிறிய அளவுடைய வயல்களின் கூட்டுடைமை ஆகிய நிலைமைகளையும் காண முடிந்தது.

இங்குள்ள குத்தகைக் கமக்காரர்களில் பலர் சட்டப்படி விளைச்சலில் கால்வாசியை காணிச் சொந்தக்காரருக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அரைவாசியைக் குத்தகைக் கூலியாகக் கொடுக்கிறார்கள், சில குத்தகைக் கமக்காரர்களுக்குக் காணிச் சொந்தக்காரர்கள் விதைநெல், உரம், கம இரசாயனப் பொருட்கள் முதலியவற்றைக் கொடுத்தும் உள்ளனர்.

- இப்பிரதேசத்தில் அநேகர் மேட்டு நிலப் பயிர்ச்செய்கையையே மேற்கொண்டுள்ளனர் என்பது ஆய்வின் போது தெரியவந்துள்ளது. இத்தகைய பயிர்களுள் றப்பருக்கு முக்கிய இடம் கிடைத்துள்ளபோதிலும் றப்பர் தோட்டங்கள் அவ்வளவு நல்ல முறையில் நிருவகிக்கப்படவில்லை என்பது தெரியவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆங்காங்கே ஒழுங்கற்ற முறையில் வாழை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் போன்றவை பயிரிடப்பட்டுள்ளன. இவற்றை முறைப்படி பயிரிட்டால் நல்ல ஆதாயம் கிடைப்பதற்கு வழியுண்டு.

- இப்பகுதியில் தொன்றுதொட்டு நெல் விளைவிக்கப்பட்டு வந்தபோதிலும் நாட்டின் மற்றப்பகுதிகளில் கிடைப்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது விளைச்சல் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. காணித் துண்டாடல் இங்கு நிலவும் மற்றும் ஒரு சிக்கலாகும்.

- பயிரிடும் நிலம் சிறிதாக இருப்பதாலும், நிரந்தரமான தண்ணீர் வசதி இல்லாததாலும், கமச்சேவைகள் திறம்பட இல்லாதமை, முறையான பயிர்ச் செய்கைத் திட்டத்தைக் கடைப்பிடிக்கக் கமக்காரர்களிடம் போதிய பணவசதி இல்லாதமை ஆகிய காரணங்களினாலும், முன்னேற்றகரமான பயிர்ச் செய்கை முறைகளைப் பின்பற்ற முடியாதிருப்பதும் அதனால் விளைச்சல் குறையக் கூடியதன்மை நிலவவும் செய்கிறது.

- பெமினிவத்தைப் பகுதியில் சில கிராமங்களில் காணியற்றவர்களின் எண்ணிக்கை வெகு கூடுதலாகவுள்ளது. அதனால் இப்படிப்பட்டவர்களில் பலர் வேலை கிடைக்கக்கூடிய காலங்களில் வரண்ட வலயத்துக்கு வேலைதேடிப் புறப்பட்டுவிடுவதையும் கவனிக்க முடிந்தது.

- 14 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களிடையே வேலை இல்லாப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது.

- இப்பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கமநலவுப் பெருக்கக் குழு, புதிதாக நியமிக்கப்பட்ட பயிர்ச் செய்கைக் குழுக்கள் ஆகியவற்றிடையே தொடர்பு இன்னும் நெருக்கமாக இல்லாததனால் கமத்தொழில் அபிவிருத்தியில் காட்டப்படும் அக்கறை குறைவாகவுள்ளது.

- பெமினிவத்தைப் பிரதேசத்தில் நெல், வாழை, றப்பர், தேங்காய், தேயிலை, மிளகு, சாதிக்காய் போன்றவை விளைகின்றன. இவற்றுள் நெல் நீங்கலாக ஏனையவற்றைத் தனிப்பட்ட வியாபாரிகளே வாங்குவதனால், அவற்றை விளைவிப்பவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதாக இல்லை என்பதும் நடத்தப்பட்ட ஆய்விலிருந்து தெரியவந்தது.

இத்தகைய சிக்கல்களைக் களைவதற்குச் சில பரிகாரங்களையும் இந்த ஆய்வு எடுத்துக் கூறியுள்ளது. இப்பரிகாரங்கள் பெமினிவத்தைப் பிரதேசத்துக்கான அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதற்குத் துணையாக இருக்கும்.

## குறுகியகால, இடைக்காலத் திட்டங்கள்

- மேட்டுநிலப் பயிர்ச் செய்கையில் அதிக விளைச்சல் கிடைக்காதிருப்பதனால் அதிக நயம் தராத பாக்கு மரவளர்ப்பை ஒழித்து, அவ்விடங்களில் சிறு ஏற்றுமதிப் பயிர்களையும் உணவுப் பயிர்களையும் விளைவிக்கலாம். அத்துடன் போக்குவரவு, சந்தைப்படுத்தல், பண்டசாலைப்படுத்தல் போன்ற வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும்.

- பாற்பசுக்களை வளர்ப்பதற்குக் கடன், மிருக வைத்திய வசதி போன்றவற்றை ஏற்படுத்தலாம். பால் விற்பனைக்கான வசதிகளையும் செய்து கொடுக்கலாம். இதனால் மக்களின் வருவாயும் பெருகும்; வேலைவாய்ப்பும் ஏற்படும்.

- தக்க கவனிப்பு இல்லாத காரணத்தால் றப்பர், தென்னை போன்றவற்றால் போதிய ஆதாயம் கிடைப்பதில்லை. பழைய கன்றுகளை நீக்கி புதுக்கன்றுகளை நடுதல் போன்றவற்றால் உற்பத்தியைப் பெருக்கலாம். இலாபகரமற்ற சிறிய தேயிலைத்தோட்டங்களில் தேயிலையை அழித்துவிட்டு, வருவாய் தரக்கூடிய வேறு பயிர்களைச் செய்கை பண்ணலாம்.

- மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்குக் கமக்காரர் அடையாள அட்டையின் பேரில் கடன் வழங்கப்படுவதில்லை என்பதால் மேட்டுநிலத்தில் பயிர்ச் செய்கையை வெற்றிகரமாகச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவதில்லை. ஆதலால் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கு ஏதாவது ஒரு கடன் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

**நீண்டகாலப் பரிகாரம்**

- காணித்துண்டாடல் பிரதேச அபிவிருத்தியைப் பாதிக்கும். ஆதலால் காணிகளை மேலும் துண்டாடாது, குழுமுறைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு பிரதேசத்தை அபிவிருத்தி செய்யலாம்.

- இப்பகுதியில் ஜனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் குடும்பக் கட்டுப்பாடு முறையைப் பரப்புதல் வேண்டும்.

**பயிற்சி நடவடிக்கைகள்**

கமநலத்துறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு எவ்வளவு முக்கியத்துவத்தை இந் நிறுவகம் அளிக்கிறதோ அவ்வளவு முக்கியத்துவத்தைக் கமநலத்துறையில் பயிற்சி அளிப்பதற்கும் கொடுக்கிறது. இதனாலேயே பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் நடாத்தப்படுகின்றன.

இவ்வருட முற்பகுதியில் மட்டக்களப்பு நகரில் மூன்றாவது கமக்காரர் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கிலேற்பட்ட விபரத்தை இவ்விதழில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரையில் காணலாம்.

# சோயா அவரை - பேரீச்சம்பழக் கேக்

**தேவையானவை:**

| | |
|---|---|
| சிறுதுண்டுகளாக நறுக்கிய பேரீச்சம்பழம் | 1 கிண்ணம் |
| சிறுதுண்டுகளாக நறுக்கிய கஜு | 1 கிண்ணம் |
| அப்பச்சோடா | 1 தேக்கரண்டி |
| கொதிநீர் | 1 கிண்ணம் |
| சீனி | 1 கிண்ணம் |
| உப்பு | ½ தேக்கரண்டி |
| வனிலா | 1 தேக்கரண்டி |
| கோதுமை மா | ¾ கிண்ணம் |
| சோயா அவரை மா | ¾ கிண்ணம் |
| நல்லாக அடித்த முட்டை | 1 |
| வெண்ணெய் அல்லது மாஜரின் | 2 மேசைக்கரண்டி |

**செய்முறை**

1. நறுக்கிய பேரீச்சம்பழம், அப்பச்சோடா, வெண்ணெய் ஆகியவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு, கொதிநீரை ஊற்றி நல்லாகக் கலக்கி ஆறவைக்கவும்.
2. கோதுமை மாவையும் சோடா மாவையும் நல்லாகக் கலந்து வைத்துக்கொள்ளவும்.
3 முட்டையையும் சீனியையும் நல்லாகக் கலந்து அடித்து வைத்துக்கொள்ளவும்.
4. முட்டை - சீனிக் கலவையுடன் பேரீச்சம்பழக் கலவை, கஜு பருப்பு, உப்பு, வனிலா ஆகியவற்றை சேர்த்து அடிக்கவும்.
5. இவ்வாறு அடிக்கப்பட்ட கலவைக்கு ஒரு முறைக்கு ஒரு மேசைக் கரண்டி மாவைப் போட்டுப் படிப்படியாகக் கலந்துகொள்ளவும்.
6. இக்கலவையை மாஜரின் பூசிய கடுதாசியிட்ட கேக் தட்டில் ஊற்றி, கேக் சுடும் கனலடுப்பில் ஒன்று அல்லது ஒன்றேகால் மணித்தியாலம் வேகவைத்து எடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்திச் சபைகள்

**பிரதேச அபிவிருத்திச் சபைகள் என்றால் என்ன? இவை எந்த அமைச்சின் கீழ் இயங்குகின்றன?**

இவை தேசத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பிரதேசவாரியாக நிறுவப்பட்டுள்ள சபைகளாகும். சபையின் பிரதேச எல்லை தற்பொழுது தேர்தற் தொகுதியாகும். இவை திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் பிரிவுகளுள் ஒன்றான மாநில அபிவிருத்திப் பிரிவின் கீழ் இயங்கு கின்றன.

**இவை எப்பொழுது எதற்காக ஆரம்பிக்கப் பட்டன?**

1970ன் பிற்பகுதியிலிருந்து இவை நிறுவப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டன. பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய மூலவளங் களை முடிந்தளவரையில் பயன்படுத்தி கமத்தொழில், கைத்தொழில், மீன்பிடித்தல் போன்ற பல சிறிய திட்டங்களை அவ்வப்பகுதி களில் ஆரம்பித்து அப்பகுதிகளிலுள்ள இளைஞருக்கும் யுவதிகளுக்கும் வேலைவழங் கும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டன.

**மேற்கூறப்பட்ட அடிப்படைக் கொள்கையை வெளிப்படுத்தும் செயல் நோக்கங்கள் என்ன?**

- உள்ளூர் மூலவளங்களை ஆதாரமாகக் கொண்ட அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்துதல்.

- குறைந்த அளவு முதலோடு அதிகமா னோருக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட் டங்களை பரவலாக உருவாக்கல்.

- பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது மூலம் வருமானப் பங்கீட்டை பரவ லாக்குதல், தூர்ந்து போயுள்ள பழைய தொழில்நுட்ப முறைகளை மீளப்புதுப்பித்து விரிவாக்குதலும், நாட்டின் பொருளாதார நிலைமைக்கு உகந்த தொழில் நுட்பங்களை ஆராய்ந்து பின்பற்றுதலும்.

- தற்பொழுது இறக்குமதி செய்யப் படும் அத்தியாவசியப் பொருட்களை இயன்ற அளவு உள்நாட்டில் உற்பத்தி செய்வது மூலம் வெளிநாட்டுச் செலாவணியை சேமித்தல். வெளி நாட்டுச் செலாவணியை பெற்றுக் கொள்ளக்கூடிய ஏற்றுமதி உற் பத்தித்துறையிலும் கவனமெடுத் தல்.

- அந்தந்தப் பிரதேசத்திலுள்ள அபி விருத்தியோடு தொடர்புபட்ட எல்லா நிறுவனங்களது கொள்கைகளையும் ஒன்றிணைத்து பொதுவான அபிவி ருத்திக்கொள்கையை வகுத்து அவற்றின் செயற்பாட்டை முன் னெடுத்துச் செல்லல்.

- திட்டமிடல், திட்ட நிறைவேற்ற வேலைகளில் மக்களை அதிகம் உட் படுத்துவது மூலம் பொறுப்புக்களை ஏற்பதற்கு அவர்களுக்குப் பயிற்சி, சந்தர்ப்பம் அளித்தலும், அபிவி ருத்தி நோக்கில் ஆரோக்கியமான மக்களைக் கொண்ட சமூகத்தை உருவாக்கலும்.

- கூட்டுறவு அமைப்பினை அபிவிருத்தி வேலைக்கு உச்சமாகப் பயன்படுத்தல். உற்பத்திச் சாதனங்களைக் கூட்டுறவு அடிப்படையில் பங்கிட்டு அளிப்பதன் மூலமும், வருமானங்களை அவ் வாறு செய்வதன் மூலமும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து சமூக நீதியை நிலைநாட்டுதல்.


- நாடெங்கிலும் பலவேறு செயற் திட் டங்களை ஆரம்பிப்பதன் மூலமும் மக்கள் மத்தியிலே தொழில் செய் யும் உணர்வை ஊக்கப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் உற்பத்தியைப் பெருக்கவுள்ள வழிகள்

நாட்டின் ஈரவலய நடுப் பகுதியில் அல்லது வருடத்தில் 70 அங்குலத்துக்கு மேல் மழை வீழ்ச்சியைப் பெறும் தெங்குப் பிரதேசத்திலே பால் உற்பத்திக்காக மாடு வளர்ப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. இதன்படி இப்போது பால் மாடு வளர்ப்பவர்களுக்கும், இனிமேல் பால்மாடு வளர்க்க நினைப்பவர்களுக்கும் இலகுவாக கடன் கிடைப்பதற்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.



## என்ன தேவைக்கு கடன் தருவார்கள்?

1. இப்போதுள்ள பாற்பண்ணையை விருத்திசெய்தற்கு;
2. புதிதாகப் பாற்பண்ணையை ஏற்படுத்தற்கு;
3. புல் வளர்த்தற்கு;
4. பட்டி கட்டுவதற்கு;
5. தண்ணீர் வசதி ஏற்படுத்திக்கொள்வதற்கு;
6. பாற்பசுக்களை வாங்குதற்கு.

## கடன் பெறுதற்குள்ள தகுதிகள் என்ன?

1. நாட்டின் ஈரவலய மத்திய பகுதியில் அல்லது வருடம் 70 அங்குலத்துக்கு மேல் மழை வீழ்ச்சிபெறும் தெங்குப் பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. புல் வளர்த்தற்கு ஏற்றதாகவும், குறைந்தது ஓர் ஏக்கர் நிலத்தை உடையவராகவும் இருத்தல்.
3. வங்கியின் கடன் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
4. பாற்பசு வளர்ப்பில் ஆர்வம் உடையவராக இருத்தல்.

## கடன் நிபந்தனைகள்

1. வருடத்தில் பத்து சதவீத வட்டி அறவிடப்படும்.
2. 12 வருடங்களுக்குள் எடுத்த கடன் தொகை முழுவதையும் திருப்பிச் செலுத்தவேண்டும்.

## கடன் தொகையை அனுமதித்தல்

1. கடன் பெறுவதற்குரிய தகுதிகளை வங்கி தீர்மானிக்கும்.
2. பாற்பண்ணை பற்றிய தொழில்நுட்ப, பொருளாதார தகுதிகளைப் பேராதனையில் உள்ள பாற்பண்ணை அபிவிருத்தித் தலைமை அலுவலகம் முடிவு செய்யும்.
3. இவற்றில் திருப்தி எனக் கண்டால் கடன் அனுமதிக்கப்படும்.
4. கடன் தொகை பிரித்துத் தவணைகளில் கொடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் பாற்பண்ணைக்குரிய திட்டம் வகுத்தல்

1. கமத்தொழில் திணைக்களத் தின பண்ணைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உங்களைச் சந்தித்துத் தேவைக்கேற்றபடி பண்ணைக்குரிய திட்டத்தைத் தயாரித்துத் தந்து உதவுவார்கள்.
2. இத்தகைய ஒரு திட்டத்தில் முதலீடு, விற்பனை, நடத்தற் செலவும் வருவாயும், செலவு பற்றிய விபரம் போன்ற அம்சங்கள் சேர்க்கப்படும்.

## புற்துண்டங்கள் பெற்றுக் கொள்ளுதல்

1. நாட்டத் தேவைப்படும் புற்துண்டங்களை நீங்கள் கமத்தொழில் திணைக்களத்தின் பாற்பண்ணைப் பிரிவிலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.
2. தொகையாக வாங்குவதாயின் வாகன வசதியும் ஒழுங்குபடுத்தப்படும்.
3. பெரும் பரப்பளவுக்குப் புல் நடுவதாயின் நீங்களே புல் மேடை அமைத்துக்கொள்வது நல்லது.

## பசுக்களை வாங்குதல்

1. இறக்குமதி செய்யப்படும் பசுக்களையும் கன்றுகளையும் வாங்கலாம். அவற்றின் விலை கூடுதலாக இருந்தால், அடுத்தவர்களின் பாற்பண்ணைகளிலிருந்து பசுக்களையோ கன்றுகளையோ வாங்கலாம்.
2. பசுவின் பெறுமதியை உங்களுக்குக் கடன் தரும் வங்கி நேரடியாகப் பசுவின் சொந்தக்காரருக்கே செலுத்துகிறது.
3. பசுக்களைத் தெரிவதிலும் அவற்றின் பெறுமதியை மதிப்பிடுவதிலும் பாற்பண்ணைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களது உதவியை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப்பாற்பண்ணைத் திட்டத்தின் கீழ் இந்த வருடத்திலிருந்து பசுக்கள் கன்றுகள் விற்பதற்குக் கமத்தொழிற் திணைக்களம் தொடங்கியுள்ளது

## பாற்பண்ணை அபிவிருத்தியும் முகாமையும்

1. பாற்பண்ணைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அடிக்கடி உங்கள் பண்ணைக்கு வந்து பார்வையிடுவார்கள்.
2. நீங்கள் அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றவேண்டும்.
3. பாற்பண்ணையின் முன்னேற்றத்தை இவ்வுத்தியோகத்தர்கள் அறிக்கையிடுவார்கள்.
4. விரும்பத்தக்கவகையில் முன்னேற்றம் காணப்படாவிட்டால், கடன் மறுக்கப்படலாம் அல்லது நிறுத்தப்படலாம்.

## பால் விற்பனை

1. பாற்பண்ணையில் கிடைக்கும் பாலை நீங்கள் பாற்கூட்டுறவுச் சங்கத்திடமோ அல்லது நேரடியாகப் பாற்சபையிடமோ விற்பனை செய்யலாம்.
2. பாலுக்கு நல்ல விலை கிடைக்கப் பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழி காணப்படும்.
3. நூற்றுக்கு 4.5 வீதம் வெண்ணெய் உள்ள பால் பைந்து ஒன்றுக்கு -/95 சதப்படி பாற்சபை விலை கொடுக்கிறது.

**மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும். ஆரோக்கிய வாழ்வு போஷாக்கு மிக்க உணவையும் பொறுத்துள்ளது. பால் போஷாக்குச் சத்து நிறைந்தது என்பதை மறுக்கமுடியாது. ஆகவே நாம் பால் உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்ய வேண்டும். நாடு பாற்தேவையில் தன்னிறைவை அடைதல் அவசியம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனுக்கு உதவும் பூச்சிகள்


பூச்சிகள் நாசம் விளைப்பன என்று தான் பொதுவாக நாம் நினைப்பதுண்டு. ஆனால் அவற்றிலும் பல மனிதனுக்கு நன்மை பயப்பனவாக இருக்கின்றன என்பதை முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். மிருதுவான பட்டு நூலைத் தரும் பட்டுப் பூச்சியைப் பற்றியும், மட்டற்ற சத்துக்களைக் கொண்ட இனிய தேனைத் தரும் தேனீயைப்பற்றியும் முன்னைய கட்டுரையில் பார்த்தோம். இக் கட்டுரையில் மற்றும் இரு பிரயோசனமான பூச்சிகளைப் பற்றிப் பார்ப்போம்.

## அரக்குப் பூச்சி

மரக்கிளைமீது அசைவற்று மீன் செதிளைப் போல் ஒட்டிக்கொண்டு இருக்கும் இப்பூச்சியைப் (படம்) பார்க்கும்போது, இதனால் மனிதனுக்கு என்ன பிரயோசனம் என்று தான் எண்ணத் தோன்றும். ஆனால் உலகெலாம் தெரிந்த அரக்கு (ஷெலக்) என்ற பொருள் இப்பூச்சியிலிருந்தே பெறப்படுகிறது. வாணிஷ், பொலிஷ், லித்தோ அச்சுக்கான மை, முத்திரையிடும் அரக்கு, மின்சாரம், வெப்பம் போன்றவற்றுக்கு எதிரான காவலிகள் (இன்சுலேட்டர்), இசைத்தட்டுக்கள், பொத்தான், மட்பாண்டங்கள், பொம்மைகள் போன்ற பொருட்களைச் செய்தற்கும் மரம், உலோகம் போன்றவற்றுக்கு மெருகு ஊட்டுவதற்கும் இவ்வரக்கு பயன்படுத்தப்படுகிறது. விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சிகள் பல கண்ட இந்நாட்களிலும் இந்த அரக்குக்கு இணையான அல்லது உயர்வான வேறு ஒரு பொருள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் உங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும்.



இச் செதிள் பூச்சி இந்தியா, பர்மா போன்ற நாடுகளில் உள்ள காடுகளில் காணப்படுகிறது. அரக்குத் தொழிலை வளர்ப்பதற்காக இலங்கைக்கும் இப்பூச்சி கொண்டு வரப்பட்டு வளர்க்கப்பட்டது. இது தன்னைச் சுவாத்தியக் கொடுமையிலிருந்தும், தன் எதிரிகளிடமிருந்தும் பாதுகாத்துக்கொள்வதற்காக இயற்கையாகச் சுரக்கும் ஒரு பதார்த்தமே அரக்காகும். சுரக்கும்போது பிசுபிசுப்பாக இருக்கும் இப்பொருள் காற்றுப்பட்டதும் இறுகிவிடுகிறது. இப்பூச்சிகள் குவிந்திருக்கும்போது மரக்கிளைகளில் இவை படை படையாக அமைகின்றன (படம்).



இப்பூச்சிகளைச் சுற்றிலும் கடினமாகி அமைந்துள்ள அரக்கு மரக்கிளைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, உரலில் இட்டு இடிக்கும்போது அப்பொருள் சிறுசிறு உருண்டைகளாகவும் தூளாகவும் வேறுபடுகின்றது. அரக்குத் தூள், பொம்மைகள் தயாரிக்கப் பயன்படுகிறது. உருண்டைகளாகவுள்ள அரக்கு தண்ணீரில் ஊறவைக்கப்பட்டு காலினால் மிதிக்கப்படும் போது அரக்கிலுள்ள சாயம் நீங்கிவிடுகிறது. அதன் பின்னர் இது துணி உறையிலிடப்பட்டு நெருப்பில் சூடுகாட்டப்படுகிறது. உருகிய அரக்கு துணியிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்டு மெல்லிய தகடுகளாக வார்க்கப்படுகிறது. பின்னர் சிறு துகள்களாக நொறுக்கப்படுகிறது. மதுசாரத்தில் இத்தகைய அரக்குத் துகள்களைக் கரைத்து நீர்த்தன்மைவாய்ந்த அரக்குத் தயாரிக்கப்படுகிறது. ஒன்றரை இலட்சம் அரக்குப் பூச்சியிலிருந்து ஓர் இறாத்தல் அரக்குக் கிடைக்கிறது! இப்பூச்சிகளை நாம் வளர்க்க முடியாது. ஆகவே இப்பூச்சிகள் காணப்படும் காடுகளிலிருந்தே அதன் அரக்கைத்திரட்ட வேண்டியுள்ளது.



Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்தம்பலப் பூச்சி

இப்பூச்சி கள்ளிச்செடிகளில் ஒட்டுண்ணி யாக வாழ்வதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இப்பூச்சியின் உடலில் ஒருவித இயற்கைச் சாயம் இருப்பதை ஐரோப்பியர் அமெரிக்காவைக் கண்டு பிடித்தற்கு முன்னரே மெக்சிக்கோவில் வாழ்ந்த பழங்குடி மக்கள் அறிந்திருந்தார்கள். இப்பூச்சி இனம் இப்போது மெக்சிக்கோ, கனறித்தீவுகள், ஹொன்டியூராஸ், ஸ்பெயின், அல்ஜீரியா, பெரு ஆகிய நாடுகளில் வளர்க்கப்படுகின்றது.

வெண் தம்பலப்பூச்சிகள் கள்ளிச்செடிகளிலிருந்து சேகரிக்கப்பட்டு, உலர்த்தப்பட்ட பின்னர், தூளாக அரைக்கப்படுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் தூள் சிங்காரிப்புப் பொருளாகவும், முகத்திற்குப் பூசும் செவ்வண்ணச் சாயத்திற்கும், கேக் அலங்காரிப்புப் பொருளுக்கும், உணவுப் பண்டங்களுக்கு வண்ணம் ஊட்டவும் பயன் படுத்தப்படுகிறது. தவிர, இத்தூள் கக்குவான் இருமல், நரம்புவலி ஆகிய வியாதிகளுக்கு மருந்தாகவும் பாவிக்கப்படுகிறது. வண்ணப்பொடி ஓர் இறுத்தல் தயாரிப்பதற்கு எழுபதினாயிரம் பூச்சிகளைப் பொடியாக்க வேண்டியிருக்கும் எனவும் கணக்கிட்டுள்ளார்கள்.

---

## விளைவுபெருக்கச் சட்டம்

கமத்தொழில் விளைவுப்பெருக்கச் சட்டத்தின் குறிக்கோள்கள் ஐந்து. அவை:


1. நெற்காணி, மேட்டுக்காணி அனைத்தினதும் விளைவுப் பெருக்கத்தை உச்சமாக்குதல்;
2 கிராம மட்டத்தில் பயிர்ச் செய்கைக் குழுக்களை மீள அமைத்தல்;
3. பிரதேச மட்டத்தில் கமத்தொழில் விளைவுப்பெருக்கக் குழுக்களை நிறுவுதல்.
4. குத்தகைக் கமக்காரர்களது உரிமைகளைப் பேணுதல்;
5. கம நியாயச் சபைகளை நிறுவுதல்.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவருக்கு விளையாட்டு – விநோதம்



படத்தில் காணப்படுவதைப் போன்ற அமைப்பில் காணி ஒன்று கமக்காரர் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது. அவர் இறப்பதற்கு முன்னர் அந்தக் காணியை தனது பிள்ளைகள் நால்வருக்குப் பிரித்துக் கொடுக்க நினைத்திருந்தார். எல்லாப் பிள்ளைகள் மீதும் அவர் ஒரே மாதிரி அன்பு காட்டியமையினால் காணியையும் ஒரே மாதிரியே பிரித்துக்கொடுக்க நினைத்தார். இது பெரும் சிக்கலான காரியமாக இருந்தும், அவர் தனது காணியை அளவில் சமமாகவும், அமைப்பில் ஒரேவிதமாகவும் நாலாகப் பிரித்துப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார். உங்களாலும் அவ்வாறு காணியைப் பிரித்துக் கொடுக்க முடியுமா எனப்பாருங்கள்.



படத்தில் உள்ளதைப்போன்று மேசை மீது ஒரு கடுதாசித்துண்டை வையுங்கள். கடுதாசிக்குமேல் போத்தலைத் தலைகீழாக நிறுத்தி வையுங்கள். (போத்தல் உருண்டு நிலத்தில் விழலாம். போத்தல் ஓடுகள் காலை வெட்டலாம். கவனம்) போத்தல் மேசைமீது அப்படியே நிற்க கடுதாசியை இழுத்து எடுக்கமுடியுமா என்று பாருங்கள். ஒரு விஷயம் நினைவிருக்கட்டும். போத்தலைக்கையினால் தொடக்கூடாது.



இந்தச் சுவரின் உயரம் 30 அடி. நிலத்திலிருந்து நத்தை ஒன்று சுவர்மீது ஏறத்தொடங்கியது. பகலில் அது 3 அடி உயரத்திற்குச் சுவரில் ஏறினாலும் இரவில் அது 2 அடிக்குக் கீழே வழுவிவந்துவிடும். இந்த 30 அடி சுவர் மீது ஏற நத்தைக்கு எத்தனை நாட்கள் செல்லும்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# சிறுவருக்கு விளையாட்டும் விநோதமும்


## விடைகள்




படத்தில் காட்டப்பட்டுள்ள முறையிலேயே கமக்காரர் தனது நிலத்தை அளவிலும் அமைப்பிலும் ஒரேவிதமாக இருக்கக்கூடிய வாறு பிரித்துக் கொடுத்தார்.



போத்தல் மேசைமீது நிற்கக் கூடியதாகக் கடுதாசியை இழுக்கும் முறை இதுவே. ஒரு கையினல் கடுதாசியின் ஒரு மூலையை மெதுவாகப் பிடித்து இழுக்கையில், மற்றக் கையினல் மேசைமீது மெதுவாகத்தட்டிக் கொண்டிருங்கள். போத்தல் சற்று ஆடும் போது கடுதாசியை மெல்ல மெல்லச் சிறிது சிறிதாக இழுத்தெடுக்கலாம்.




நத்தை 3 அடி உயரம் ஏறும்போது, 2 அடி கீழே நழுவுகிறது. அதனல் அது ஒரு நாளில் உண்மையில் ஓர் அடி உயரத் திற்கு மாத்திரமே ஏறமுடிகிறது. ஆகவே 30 அடி சுவரை ஏறிமுடிக்க அதற்கு 30 நாட்கள் செல்லும். ஆனல் அது 28 ஆம் நாள் ஏறியபோது, சுவர் உச்சியை அடைந்து விடும் என்பதால், 2 அடி கீழே நழுவாது. இதனல், சுவரின் முழு உயரத்தையும் ஏறிமுடிக்க அதற்கு 28 நாட்களே செல் லும். சரிதானு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தினால் 29, ஜயந்தவீரசேகர மாவத்தை, கொழும்பு 10-ல் உள்ள குணரத்ன அன் கம்பெனியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org